விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26 பங்குனி 25 மலர் 4 இதழ் 56
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 7-4-84

"இலங்கைத் தமிழர்கள் விவகாரம்:

## ஐ.நா.வில் இந்தியா குரல்எழுப்பவேண்டும்!"

[புதுடில்லி]

இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுவது பற்றியும் மனித உரிமைகள் பெருமளவில் அங்கு மீறப்படுவதுக் குறித்தும் இந்தியா ஐ.நா மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் குரல் எழுப்ப வேண்டுமென்று லோக்தள் கட்சி உறுப்பினர் ரஷீத் மசூட் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆட்சியை இலங்கை அரசு பிரகடனப் படுத்த விருப்பது பற்றியும் தமிழர்கள் பெருமளவில் கைது செய்யப் படுவது குறித்தும் லோக்சபாவில் (இந்திய பாராளுமன்றத்தில்) நேற்று கொண்டு வரப்பட்ட விசேட விவாதத்தை தொடக்கி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"இலங்கையில் தமிழர்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்க இந்தியா முன்வரவேண்டும். இதற்காக இலங்கைமீது பொரிய பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

"இலங்கை அரசாங்கம் தற்போது மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் வெளிநாடுகளுக்கும் தொடர்பிருக்கிறது. இது இந்தியாவின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும்" என்று மற்ற

[10-ம் பக்கம் பார்க்க]

# "பயங்கரவாதிகள் தமிழ்நாட்டில் இயங்க இந்திய அரசாங்கம் ஊக்கமளித்துள்ளது!"

### பாராளுமன்றத்தில் அமைச்சர் மொகமட்

(கொழும்பு)

"பயங்கரவாதிகளும், ஏனையோரும் தமிழ்நாட்டில் இயங்குவதற்கு இந்திய அரசு ஊக்கமளித்துவருகிறது" என்று போக்கு வரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். மொகமட் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினால் அரசாங்கத்திற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை அரசாங்க தரப்பில் நேற்று பாராளுமன்றத்தில் ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் கூறினார்.

(10ம் பக்கம் பார்க்க)



### நீதிமன்றத்தில் நடந்த

## 'திகில் நாடகம்!'

### துப்பாக்கிப்பிரயோகத்தில் 'போயா' படுகாயமடைந்தார்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் கைதிகள் அடைக்கப்பட்டிருக்கும் கூண்டில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில், மண்டைதீவு கொலை வழக்கு எதிரியான யோகராசா (போயா) படுகாயமடைந்து யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் நடந்தபோது நீதிமன்றம் ஆரம்பிக்கவில்லை. உள்ளே இருந்த சட்டத்தரணிகள் சிலரும், பொதுமக்களும் வெடிச்சத்தம் கேட்டு சிதறி ஓடினார்கள் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் போது காயமடைந்த சிறைச்சாலை பாதுகாவலர் எஸ். டபிள்யூ. ஜெயராசா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக் காலை யாழ். சிறைச்

(10-ம் பக்கம் பார்க்க)

### விஞ்ஞானபீட மாணவர் நடத்திய

## திடீர் மறியல் போராட்டம்

### யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் ஸ்தம்பித்தது

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்கள் இரு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று நடத்திய மறியல் போராட்டத்தைத்தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் முற்றாக ஸ்தம்பித்தது.

ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி அமைதியான முறையில் இப்போராட்டத்தை மாணவர்கள் நடத்தி முடித்தார்கள். விஞ்ஞானபீட சகல பிரிவுகளுமடங்கிய பல்கலைக்கழக நிர்வாகப்பகுதியும் நேற்று முடப்பட்டிருந்தது.

நேற்றுக்காலை 7-30 மணிக்கு விஞ்ஞானபீடத்தை சேர்ந்த சகல மாணவ மாணவிகளும் பல்கலைக்கழகத்தின் சகல வாசல்களிலும் குழுமி நின்று கதவுகளைச் சாத்திவிட்டு மறியல் செய்தார்கள். இதனால் பல்கலைக்கழகத்துக்குக் கடமையாற்றவந்த நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகள் வெளியில் நிற்க வேண்டிநேரிட்டது.

சுமார் ஒரு மணிநேரத்தின் உத்தியோகத்தர்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பிச் சென்றுவிட்டார்கள் என

[10-ம் பக்கம் பார்க்க]

## இளைஞர் சுடப்பட்டு மரணம்

(வவுனியா நிருபர் ரி விவேகராசா)

தப்பியோட முயன்றதாகக் கூறப்படும் நகுலன் என்ற இளைஞர் வியாழன் இரவு இராணுவத்தினரால் சுடப்பட்டு மரணமானார்.

நான்கு மாதத்துக்கு முன்னர், 'ரூமன்' என்ற இளைஞர் ஒருவர் செட்டிகுளம் சந்தியில் சுடப்பட்டு மரணமானது தொடர்பாக நகுலன் என்பவர் ஆனையிறவில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்தார்.

இவர் நேற்று வவுனியாவி

(10-ம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதுவர் சத்வால் ஜனாதிபதி ஜே. ஆர். சந்திப்பு

### இந்திராவின் செய்தி கையளிக்கப்பட்டது

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு எஸ் ஜே சத்வால் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்த்தனாவைச் சந்தித்து இலங்கையின் இனப்பிரச்னை தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இலங்கையின் இனப்பிரச்னை தொடர்பாகப் புதுடில்லியில் இந்தியத்தலைவர்களுடன் ஆலோசனைகளை நடத்தி விட்டு, இலங்கை திரும்பிய திரு. சத்வால் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் செய்தி யொன்றையும் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனாவிடம் இச்சந்திப்பின்போது கையளித்

(10-ம் பக்கம் பார்க்க)

### சல்யூட் 7' விண்வெளிக்கலத்திலுள்ள

## இந்திய விண்வெளி வீரருடன் இந்திரா காந்தி உரையாடினார்

புதுடில்லி, ஏப் 6 ராகேஷ் சர்மாவுடன் பூமியை வலம் வந்து கொண்டிருக்கும் 'சல்யூட் 7' விண்வெளிக் கலத்திலுள்ள இந்திய விண்வெளி வீரர்களுடன் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்றிரவு தொடர்பு கொண்டு மத்து நிமிடங்கள் உரையாடினார்.

இந்த உரையாடலின் போது திருமதி காந்தி 'உங்களின் விண்வெளிப் பயணம் வரலாற்று முக்கியத்துவமுடைய ஒரு நிகழ்ச்சியென்று ... நீங்கள் எமது இளைஞர்களுக்கு

(10-ம்பக்கம் பார்க்க)


# BOND INSTITUTES
## JAFFNA
## A/L 1986

| | | |
|---|---|---|
| 8-30 | இரசாயனம் | - மகாதேவா |
| 9-30 | பௌதிகம் | - விமல்ராஜ் |
| 10-30 | விலங்கியல் | - LEWIS |
| | பிரயோக கணிதம் | - கஜேந்திரன் |
| 11-30 | தாவரவியல் | - செல்வவடிவேல் |
| | தூயகணிதம் | - கஜேந்திரன் |
| 1-00 | தூய பிரயோக கணிதம் | - ஆறுமுகம் |
| 1-00 | விலங்கியல் | - செல்வி கமலா கந்தையா |
| 2-00 | தாவரவியல் | - குகாதரன் |
| 3-00 | பௌதிகம் | - விமல்ராஜ் |

புதிய வகுப்புகள் இன்று(7-4-84) ஆரம்பமாகின்றன

## O/L GRADE 9

புதிய பிரிவுகள் ஆரம்பம 11-4-1984

விஞ்ஞானம் - BOND இரா செல்வவடிவேல்
கணிதம் - வாமதேவா, செல்வரட்ணம்
தமிழ் - பொன். செல்வராஜா, அமிர்தராஜ்
சமூகக் கல்வி - யோசேப்ஸ்.
பொன் செல்வராசா
ஆங்கிலம் - திருமதி அந்தோனிப்பிள்ளை, மகாதேவா
வர்த்தகம் - இந்திரன், ஜேசுதாஸ்
சுகாதாரம் - இலங்கை ராஜன்
சமயம், விவசாயம், வீட்டுப்பணி ஆகிய பாடங்களும் நடாத்தப்படும். (1794)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை எண்ணெய்க்குத குத்தகை: தமிழர் விடுதலைக் கூட்டணி கண்டனம்

[கரவெட்டி]

சிங்கப்பூர் கம்பெனி ஒன்றிற்கு திருமலை எண்ணெய்க் குதங்களை இலங்கை அரசு குத்தகைக்குக் கொடுப்பதைத் தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு மு. சிவசிதம்பரம் இதுபற்றி விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

"சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்கக் கம்பெனி ஒன்றுக்கு இக்குதங்களை அரசு கொடுப்பதற்கு முனைந்தபோது அதை அறிந்து பாராளுமன்றத்தில் எமது கட்சி அதனைத் தீவிரமாக எதிர்த்தது. அரசின் இந்த நடவடிக்கை திருமலையை வல்லரசுகளின் படைக்களமாக்கப்படுவதற்கு வழிவகுக்கப்படுவதுடன் இந்திய கடற்படைப் பிராந்தியம் ஓர் சமாதானப் பிராந்தியமாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்திற்கும் பங்கம் விளைவிக்குமென்ற காரணங்களினால் அன்று அதனை எதிர்த்தோம்.

"நமது எதிர்ப்பையும் வேறு பலரது எதிர்ப்பையும் கண்ட அரசு அந்த முயற்சியைக் கைவிட்டது.

"ஆனால் இப்பொழுது மறைமுகமாக அமெரிக்காவின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஓர் சிங்கப்பூர் கம்பெனிக்கு இக்குதங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

"நாம் அறிந்த வகையில் இந்த சிங்கப்பூர் கம்பெனியின் முதலீடு எல்லாம் அமெரிக்காவினதும் அதன் நண்பர்களான பாகிஸ்தான், மேற்கு ஜெர்மனியினதும் ஆகும்.

"எனவே, நேரடியாக அமெரிக்கக் கம்பெனிக்குக் கொடாமல் அதே நோக்கங்களைக் கொண்ட இப்புதிய கம்பெனிக்குக் கொடுக்கின்றார்கள்.

"இந்தக் கம்பெனி ஒன்றும் இக்குதங்களைக் குத்தகைக்கு எடுப்பதற்கு விண்ணப்பித்த

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்தியதுறைமுகத்தொழிலாளர்வேலைநிறுத்தம் தேசிய பொருளாதாரத்தை வலுவிழக்கச் செய்யுமா?

புதுடில்லி, ஏப். 6 கடந்த மூன்று வாரங்களாக நடைபெற்றுவரும் இந்தியத் துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தினால் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை வலுவிழக்கச் செய்யும் அறிகுறிகள் தென்படுவதாகக் கூறப்படுகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

### சாரதிக்கு றிமாண்ட்

[யாழ்ப்பாணம்]

உரும்பிராய் சந்தி விபத்தில் பலியான கு. வேலுச்சாமியின் மரணவிசாரணையை யாழ் பதில் நீதிவான் எஸ். அமிர்தலிங்கம் நடத்தினார்.

லொறிச் சாரதியை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்ட யாழ் பதில் நீதிவான் பிரேத பரிசோதனையைச் செய்யுமாறு பணித்து விசாரணையை ஒத்திவைத்தார்.

### பயிற்சி முகாம்

[வேலணை]

யாழ். மாவட்ட சாரணர் அணித்தலைவர்களின் பயிற்சி முகாமொன்று யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெற்றது. சாரண உதவி ஆணையாளர் (நிர்வாகம்) திரு. டோறஸ் இராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிமுகாமில் யாழ். மாவட்டத்தில் இருந்து 15 பாடசாலைக்கு மேற்பட்ட 161 சாரண அணித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

### சாரங்கபாணிக்கு தமிழக அரசின் விருது

சென்னை, ஏப். 6

பழம்பெரும் நடிகர் கே. சாரங்கபாணிக்கு தமிழக அரசின் 'ராஜா சாண்டோ' விருது வழங்கப்படவுள்ளது.

ஒரு கேடயமும், 85 000 ரூபாவும் இவருக்கு விருதாக வழங்கப்படவுள்ளது.

திரு. கே. பிரசாத், திரு. பி. நீலகண்டன் ஆகியோர் இவ்விருதைப் பெற்றவர்களில் இருவராவர். (வெ)





உற்பத்தியிலும் வர்ண வேற்றுமை களிலும், சப்தமறு
பூரணத்துவம் அளிப்பது அத்தோடு VCR வீடியோ விள்யாட்டு, வீடியோ தட்டுக்கள்
இணைப்பு உறுப்புக்கள் கொண்டது.

ZENITH

PHILIPS

இலங்கையில் ஏகபப்பிரதிநிதிகள்

ஹேய்லீஸ் லிமிட்டெட்.

காட்சி அறைகள்: கொள்ளுப்பிட்டி தொலைபேசி: 86958
தீர்வைஅற்ற சந்தைத்தொகுதி தரைமாடி கடை இல(2)

நாம் பிலிப்ஸ் உடன் இணைந்து சிறந்ததையே வழங்குவோம்

இலகு தவணையில் செலுத்த ஒழுங்குசெய்யப்படும்

கலர் TV
14" 287 டாலர் ரூபா 11,400/-
16" 825 டாலர் ரூபா 12,500/-
20" 400 டாலர் ரூபா 15,500/-
26" 550 டாலர் ரூபா 28,500/-

உத்தரவாத காலங்கள்...

கறுப்பு/வெள்ளை TV
18" 90" டாலர் ரூபா 8,095/-
14" 112" டாலர் ரூபா 3,850/-
17" 148" டாலர் ரூபா 5,800/-

ரெலிவிஷன்செற்ஸ்-1 வருடம்

பிலிப்ஸ் VHS வீடியோகஸெற் றெக்கோடர் 420 டாலர் 'TC'

காட்சிக் குழல்-3 வருடங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மூடனுடைய பேச்சு விவாதத்துக்குள் நுழையும், அவனுடைய நாக்கு அடிபட அறை கவியழைக்கும். அவனுடைய வாயே அவனுக்கு நாசம், அவனுடைய உதடுகளே அவனுடைய உயிருக்கு மரணவலை

—பைபிள்

## நமதுநோக்கு

# இடம்பெயர்ந்த ஊழியர் இடர் தொடர்கின்றது

இடம்பெயர்ந்த ஊழியர் விவகாரங்கள் எத்துணை அனுதாபத்துடன் அணுக வேண்டுமென்பதை நாம் மட்டும் கூறவில்லை; அவ்வாறு நாமும் தமிழரென்பதால் ஒருதலைப்பட்ச கருத்து வழங்கும் குற்றத்துக்கு ஆளானோமென்ற அபாண்டத்தையும் மறந்துவிடவில்லை.

அமைச்சரவைக்கே இவ் விடயம் பற்றி முடிவெடுக்கும் அதிகாரம் உண்டு. ஆனால் விடயம் என்ன? மிக வேதனை தருமொன்று; அதனை மீட்டவே தாங்க முடியாத துன்பம்; இலங்கை வரலாற்றைக் கறைபடுத்தும் பகுதி; ஷேக்ஸ்பியர் தம்முடைய "மாக்பெத்" நாடகத்தில் லேடி மாக்பெத் என்ற பாத்திரத்தைப் பேச வைக்கிறார் "அரேபிய நாடுகளின் உள்ள வாசனைத் திரவியங்கள் அனைத்தும் இச்சிறு கரத்தின் இரத்த வெடுக்கைத் துடைத்துவிட மாட்டா"

ஆடிக் கலவரத்தில் இடம்பெயர்ந்த அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களின் எதிர்காலம் வெறும் சட்ட நடவடிக்கையால் தீர்க்க முடியாதென்பதை மனிதாபிமானம் கொண்ட எந்தப் பிறவியும் ஒத்துக் கொள்ளும்

உத்தியோகத்தில் விரக்தியடைந்து, நாட்டின் இன்றைய நிலையில் நம்பிக்கை இழந்தவர்களுக்கு கலவரத்தால் விளைந்த இடப்பெயர்ச்சி ஒரு ஆறுதலாகவுமிருக்கலாம்.

உலகையே விட்டுப்போன ஊழியர்களின் விவகாரங்கள் புறம்பானவை; ஒரு நல்ல ஆட்சி என்னென்ன வகையில் அவர்களின் குடும்பத்துக்கு புனரமைப்புச் செய்ய முடியுமோ அவ்வாறு செய்யத் தவறப்படாது. தார்மீக ஆட்சிக்கு இது ஒரு சோதனைக்காலம்.

பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் தமிழர்களே; அவர்களே இன்னும் நாட்டுக்குப் பிரச்னைகளாகவிருப்பவர்கள் என்ற எண்ணம், இனப் பகைமை, அரசியல் தீர்மானங்களிலோ, நிர்வாக நடவடிக்கைகளிலோ எள்ளளவும் இடம்பெறலாகாது.

திட்டமிடப்பட்ட அழிவு முயற்சியே இக்கலவரமென்ற போதும் ஆட்சிக்கு எதிர்பாராத நெருக்கடியை ஏற்படுத்தியதை நாம் ஆட்சேபிக்கலாகாது. அதேசமயம் இதனை உருவாக்கிய அரசியல்வாதிகள் அவர்களுடைய தனிப்பட்ட 'ராணுவப்' படைகள் நாம் குறிப்பிடும் சமூகத்துக்கு மட்டுமல்ல; நாட்டுக்கே மாறுபாடுகளை உண்டுபடுத்தினர்.

இதற்குப் பலியான லட்சக்கணக்கான தமிழ் மக்களினதும் பாதிக்கப்பட்ட மற்றைய சமூகத்தினரதும் கூட்டு வாழ்ப் பாதுகாப்பும், புனரமைப்பும், பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனின் தலைமையில் துரிதமாக நடைபெற்றதை நாம் முன்னரும் பாராட்டியிருக்கிறோம். துன்பத்துள் அதொரு இன்பம்.

''நாட்டின் எல்லாப்பகுதியும் அழகும் இன்பமும் உடையதே; ஆனால் மனிதனின் பண்பு ஏற்றதேற்ற வாறில்லை'' என்று பிஷப் ஹீபர் என்ற கிறிஸ்தவப் புலவர் அன்று இலங்கையைப்பற்றிப் பாடிய அடிகள் இன்று நினைவுக்கு வருவதை தவிர்க்கமுடியாததே. ''Where every prospect plcases and man is oniy vile''.

தனிப்பட்ட ஆத்திரத்தில் பாடினார் அவரென்று தட்டிக்கழிக்க சமகால வரலாறு இடமளிக்காது.

இன்று நாம் ஒருகுறிப்பிட்ட இனத்தின் இப் பழியைப் போடவில்லை. ஆயின் கண்டனம் பொதுவாக இந் நாட்டு மக்களைப்பற்றியதே.

இடம்பெயர்ந்த அரச — கூட்டுத்தாபன ஊழியர் எவரையும் வேலை நீக்கம்செய்வது நியாயமாகாது. ஒவ்வொரு ஊழியரின் விடயம் தனிப்பட ஆராயப்பட்டுத் தக்க நிவாரணம் அளிக்கப்படவேண்டும். இதில் இமயம் போன்ற பொறுமை வேண்டும்.

பலர் ஓய்வுபெற முயல்வார்கள்; சிலர் பாதுகாப்பான இடத்தை நாட வேண்டியிருக்கும்; இன்னும் சிலர் செய்வதென்ன என்பது தெரியாத வகையில் மனக் கசப்புக்குப் பலியாகின்றனர். இவை போன்ற கற்பனைக் கெட்டாத துன்பங்கள் ஊழியர்களைப் பீடித்திருக்கின்றன. உடனடித் தீர்ப்பு உகந்ததல்ல.

ஒரு சிலர் வசதியுற்றவர்களாயிருந்தபோதும் இன்று வாழ்வை நலிவுறுத்தும் பயங்கரமான விலைவாசி உழைப்பவர்களின் உயிரை விழுங்கும் அபாய நிலையில் இடம்பெயர்ந்தவர்களின் சம்பளத்தை வெட்டுவது வெந்த புண்ணில் வேலேச்சுவதாகும். அதுவும் புதுவருட ஆரம்பத்தில் இதுஒரு 'பூகம்பத்தை' ஏற்படுத்தும்.

பெரும்பான்மைச் சமூகத்துக்கு இத்தகைய இடர் நேருமானால் — நினைக்க முடியாத காரியம் — வேலை இழப்பது சம்பளமற்ற லீவு என்ற பேச்சுக்கே இடமிராது.

இவ்வித அநீதிகளுக்கும் அசம்பாவிதங்களுக்கும் இடமளிக்கும் பெரும்பான்மை ஒற்றை ஆட்சி சம அந்தஸ்துக்குரித்தான இருசமூகங்களுக்கு பொருத்தமற்றதாலேதான் இன்று இந்நிலையிலுள்ளன. புரிந்து உணர்ந்து ஆவன செய்தே தீரவேண்டும்.

---

இளைஞர்கள், யுவதிகளுக்கே

# கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் பெரும் பொறுப்பு!

[புலோலி]

"இளைஞர்களும், யுவதிகளும் வீட்டுத் தோட்டம், கோழி வளர்ப்பு போன்றமுயற்சிகளில் ஈடுபடுவதன்மூலம் தமது வருவாயைப் பெருக்கிக் கொள்வதுடன் கிராமிய பொருளாதார வளத்தையும் மேம்படுத்த முடியும் இதற்கு இளம் விவசாயிகள் கழகங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்."

இவ்வாறு, தொண்டமானாற்றில் இளம்விவசாயிகள் கழக மொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றிய அம்பன் விவசாயப் போதனாசிரியை திருமதி தனபதி கந்தசாமி குறிப்பிட்டார். தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் கிராமசேவை அலுவலர் திரு எஸ். ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய திருமதி தனபதி கந்தசாமி குறிப்பிட்டதாவது;

இளம் விவசாயிகள் கழகங்கள் சிறப்பாக இயங்கினால் அரசாங்கத்தின் உதவிகளையும் பெறமுடியும். தொண்டமானாற்றில் வீட்டுத்தோட்டம், கோழிவளர்ப்பு போன்ற நட

(10-ம் பக்கம் பார்க்க)

---

## எவருக்கும் பாகுபாடு காட்டப்படுவதில்லை

ஏன் இந்தப் புறக்கணிப்பு என்ற தலைப்பின் கீழ் தங்கள் 01-02 1984ந் திகதிய பத்திரிகையில் மக்கள் கருத்து என்ற பகுதியில் பிரசுரமான, கற வெட்டி கல்பொல்லையைச் சேர்ந்த திரு வ. மகாலிங்கம் அவர்களின் செய்திமடல் சார்பாகப் பின்வரும் விபரங்களைத் தங்களுக்குத் தெரிவிக்கவிரும்புகின்றேன்

யாழ். நெல்லியடிப் பட்டின நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற நாள் (01-07-1983 முதல் எவ்விதப் பாகுபாடும் காட்டாமல் எல்லாவட்டார மக்களின் தேவைகளையும் இயன்றளவு பூர்த்திசெய்து வருகின்றேன். ஆப்பட்டினத்தின் ஆறும் வட்டாரத்திலுள்ள பொதுமக்கள் பின்றி விநியோகிக்கப்படுகின்றது

நிலைமை இவ்வாறிருக்க, ஆறும் வட்டாரத்தில் ஒருபகுதி மாத்திரந்தாய் மனப்

(10-ம் பக்கம் பார்க்க)

---

## மக்கள் கருத்து

விடுத்த கோரிக்கைக்கிணங்க அண்மையில் பல புதிய தெருமின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதோடு, அப்பகுதி மின்விஸ்தரிப்பு வேலைகளுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள கிலவிருமின் சாக்கின் சந்திவி, முன்னுக்கப்பி போன்றவற்றிற மின்வடங்களின் மேல் எறிவதனால் மின்தடை ஏற்படுவதுண்டு. எனினும், இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதனால் மின்சாரம் இப் பகுதியில் தொடர்ந்து தடை

---

## மினி பஸ்காரருக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணப் பகுதிகளில் மினிபஸ் காரர்கள் பிரயாணிகளுக்கு ஏற்படுத்தும் இடைஞ்சல்கள் வருந்துதற்குரியதாகும். ஆடு மாடுகளைப்போல் மூச்சுவிடவோ கைகால்களை நீட்டி நிமிரவோ முடியாதபடி மினி பஸ்களில் காசு உழைக்கும் ஒரே நோக்கத்துடன் பிரயாணிகளை அடைத்துச்சித்திரவதை செய்வதைச் சம்பந்தப்பட்டவர்கள் தவிர்க்கவேண்டும்.

மினி பஸ்களின் கட்டணங்களிலும் கட்டுப்பாடுகள் இல்லை. உதாரணத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு ரூபா 2 75 அறவிடுகிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு ஏழு ரூபா ஐம்பது சதம் அறவிடுகிறார்கள். ஆனால் சாவகச்சேரியில் இருந்து கிளிநொச்சிக்கு ஏழு ரூபா அறவிடப்படுகிறது யாழ்ப்பாணத்தில் இருந்து ஏழு ஐம்பதும் சாவகச்சேரியிலிருந்து ஏழு ரூபாவும் அறவிடப்படும்போது ஆக ஐம்பது சதம் கழிக்கப்படுகிறது. இதைப்பற்றிச் சம்பந்தப்பட்ட மினிபஸ் சங்கத்தலைவரோ அல்லது பொறுப்பானவர்களோ கவனம் எடுத்துப் பொதுமக்களுக்குக் குறிப்பாகப் பிரயாணிகளுக்கு நிவாரணமளிக்கவேண்டும்.

இரா. சுப்பிரமணியம்
செயலாளர்
மலையாள கலைகம்

---

நல்லூர்த் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்

**பதவி வெற்றிடம்**

(அ) விற்பனை உதவியாளர்கள் (ஆண்)

வயது:- 18 35 வருடங்கள்.

கல்வித்தகைமைகள்:- க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை.

சம்பளம்:- 693 - 872 .................. (எல்லாப்படிகளும் 10X7-12.50X8 உட்பட)

விண்ணப்பங்களை 28-4-84ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

பொதுமுகாமையாளர்

கோவில் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் 1793

---

சேவ் வே ரவல்ஸ் நடத்தும்

**யாழ்ப்பாணம்-கொழும்பு பஸ் சேவை**

குளிரூட்டப்பட்டதும் T. V. படக்காட்சியுடன் புதன், ஞாயிறு மாலை 6-30 மணிக்கு C. S. K; சந்தியிலிருந்து புறப்படும்.

டிக்கட் பெறுமிடம்:

1. யாழ்ப்பாணம் பிறப்பட்டி றேட்ஸ் லிமிற்
   8, நவீனசந்தை (மேல்மாடி)
   யாழ்ப்பாணம். போன்: 28698
2. பரணி பார்மசி
   ஆஸ்பத்திரி வீதி,
   யாழ்ப்பாணம். போன்: 23886

---

**பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்**

கீழ் குறிப்பிட்டுள்ளவைக்கு நெறிமுறை செய்முறை உட்பட எமது அடுத்த வகுப்புகளும் பயிற்சியும் சனிக்கிழமை 14-04-1984-ல் ஆரம்பமாகின்றன.

| பயிற்சி | காலம் |
| --- | --- |
| ★ மெக்கானிக்கல் என்ஜினியரிங் டிப்புளோமா (Diploma in Mechanical Engineering) | 6 மாத காலப் பயிற்சி |
| ★ எலெக்ரிக்கல் என்ஜினியரிங் வேக்ஸ் டிப்புளோமா (Electrical Engineering Works Diploma) | |
| ★ மோட்டார் மெக்கானிசம் (Motor Mechanism) | |
| ★ கொம்புயூட்டர் புரோகிராமிங் (Computer Programming) | |
| ★ படம் வரைதல் (Draftsmanship) | |
| ★ கடைச்சல் யந்திரம் இயக்கம் (Lather Operation) | 4 மாத காலம் |
| ★ வெல்டிங்—மின் (Welding Arc) | 3 மாத காலம் |
| ★ மின் இணைப்பு (Electrical Wiring) | 1½ மாத காலம் |
| ★ நீர் குழாய் இணைப்பு (Plumbing) | 1 மாத காலம் |
| ★ ஆங்கில வகுப்பு (Spoken English) | |

இவ் நிறுவனத்தில் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் மட்டும் விண்ணப்பிக்கலாம். சகல வகுப்புகளுக்கும் முதல் விண்ணப்பிக்கும் 15 பேருக்கு மட்டுமே இடம். ஆகவே உடனே விண்ணப்பித்து ஏமாற்றத்தை தவிர்க்கவும்.

பதிவாளர்:

பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்
59, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

ஈயோன் தேவாலயம் - ZION CHURCH

தேவாலய கட்டிட வேலைகள் நடைபெறுவதால்
ஞாயிறு காலை 9-00 மணி தியான ஆராதனை
8-4-84ல் இருந்து மறு அறிவித்தல் கொடுக்கும் வரை
யாழ் மாநகர மண்டபத்தில்
(Town Hall) நடைபெறும்.
சனிக்கிழமை ஜெபம் காலை 9-00 மணிக்கு 129A
பிரதான வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.

போதகர்
சீயோன் தேவாலயம்
24, இராமநாதா செட்டியார் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

1762


## பிரயாணிகள் பாவனைக்கு

(மன்னார்)

தலைமன்னார் துறையில் ரயில்நிலைய அதிகாரிகள் பாவிப்பதற்கென அமைக்கப்பட்டிருந்த மலசல கூடமொன்றில் ஒருபகுதி தலைமன்னார் துறைமுகத்திற்கு வரும் பிரயாணிகளின் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது.


கலர் பிலிம் சுருள் இனும்!

விபரங்கள் நேரில்

கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்


## விஜயானந்தன் செக். பயணம்

[மானிப்பாய்]

லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளன வட பிரதேச செயலாளரும் இலங்கைத் தொழில் பொது தொழிலாளர் சங்கத்தின் உப தலைவரும், கம்யூனிஸ்ட் பிரமுகரும் பிரபல தொழிற்சங்கவாதியுமான திரு என் விஜயானந்தன் செக்கோஸ்லோவாகியாவிற்கு பயணமானார்.

இவர் செக்கோசிலோவாக்கிய தலைநகரமான பிராக் நகரில் ஏப்ரல் இரண்டாம் திகதி தொடக்கம் மே பத்தாந் திகதிவரை நடைபெறும் ஆசிய நாட்டு தொழிற்சங்கத் தலைவருக்கான கருத்தரங்கில் லங்கா தொழிற்சங்க பிரதிநிதியாக கலந்து கொள்கிறார்.

அந்நாட்டின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் கலை கலாச்சார இடங்கள் முதலிய இடங்களுக்கு விஜயம் செய்வதுடன் அங்கு நடைபெறும் கருத்தரங்குகளிலும் பங்கு கொள்வார் உலகத் தொழிற்சங்க தலைவர்களுடனும் கலந்துரையாடும் சந்தர்ப்பமும் இவருக்கு ஏற்பட்டுள்ளது.


Animal Industry Consultancy
&
Services (PTE) Ltd.

கால்நடை தொழில் நுட்ப ஆலோசனைகள்
சேவைகள் (தனியார்) நிறுவனம் லிமிட்.
89, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

மேற்படி நிறுவனம் பலதரப்பட்ட நிபுணர்கள், ஆலோசகர்கள், மிருக வைத்தியர்கள் கூட்டாகச் சேர்ந்து கால்நடை, கோழி வளர்ப்பு சம்பந்தப்பட்ட சகலவித ஆலோசனைகளையும், சேவைகளையும் நவீன விஞ்ஞான, பொருளாதார ரீதியில் வழங்க அமைக்கப்பட்டுள்ளது.

சேவைகளும் ஆலோசனைகளும்

1. மிருக வைத்தியம், அறுவைச்சிகிச்சை கிளினிக் வசதிகள்
2. கால்நடை, கோழிப்பண்ணைகளுக்கு ஆலோசனைகள், சேவைகள்
3. நல்ல இன கால்நடைகள், கோழிக்குஞ்சுகள் விற்பனை
4. செயற்கைமுறை சினைப்படுத்தல், கருத்தரிப்பு பரிசோதனை
5. நோய்களுக்கு தடுப்பு ஊசி போடுதல்
6. நல்ல தரமான கோழித்தீன், மாட்டுத்தீன், மருந்துவகைகள் விற்பனை
7. புல் வளர்ப்பு, கால்நடை உணவு சம்பந்தமான சேவைகள்

கால்நடை, கோழி வளர்ப்போர் உங்கள் சகல தேவைகளுக்கும் மேற்குறிப்பிட்ட விலாசத்தில்
காலை 8 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை
தொடர்புகொள்ளலாம். (1681)


## முதல் வருட நினைவஞ்சலி

அமரர் திரு.
நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
(நாகசெட்டி)



தோற்றம்: 4-4-1908
மறைவு: 7-4-1983

பண்பாக உயர்ந்த பாசத்தால் இணைந்து தன்னலம் பாராது எமக்காக வாழ்ந்த அன்புத்தந்தையே நீங்கள் எம்மைவிட்டு மறைந்து ஓராண்டென்ன ஓராயிரமாண்டுகளானாலும் உங்கள் அன்புஒளி என்றும் எங்கள் உள்ளங்களில் நிலைத்திருக்கும்.

தோன்றாத் துணையாய் இருந்து வழிநடத்துங்கள்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

"நாகசெட்டி கமம்" நாரூட்டான், "சுத்திமா வாசம்" சில்லாலை.

1747

## தேசிய பொருளாதாரம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசுக்கும் துறைமுகத் தொழிலாளர்களுக்குமிடையே மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடைபெறக்கூடிய சூழ்நிலை காணப்படவில்லை.

இவ்வேலை நிறுத்தத்தினால் இந்தியாவின் பத்துத் துறைமுகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இத்துறைமுகங்களில் பொருட்களை இறக்குவதற்காக 800க்கும் மேற்பட்ட கப்பல்கள் காத்து நிற்கின்றன.


இந்திய வர்த்தகர்களும், கைத்தொழில் அதிபர்களும் பொருட்களை ஏற்றுமதிசெய்ய தற்போது சிறிய துறைமுகங்களை நாடிச் சென்றுள்ளனர்.

இவ் வேலை நிறுத்தத்தால் செய்திப் பத்திரிகைகளை அச்சிடும் காகிதத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் தினசரிப் பத்திரிகைகள் வெளிவராது போகலாமென்றும் அஞ்சப்படுகிறது.

இவ்வேலைநிறுத்தம் காரணமாக 30 கோடி டாலர்களுக்கு மேற்பட்ட இந்திய ஏற்றுமதிப் பொருட்கள் துறைமுகங்களில் தேங்கிக்கிடக்கின்றன.

சம்பள உயர்வுகோரி 3 லட்சம் இந்தியத் துறைமுகத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துவருவது தெரிந்ததே. (வெ)


# பிலிப்ஸ் வழங்கும் தன்னியக்கச் சுழல் மின் விசிறிகள் 2 உன்னதத் திருப்தி அம்சங்கள் கொண்டவை



1. உட்புறம் சக்தி மிக்கது. சப்தம் அற்றது.

சிறப்பம்சங்கள்:

- நீடித்துழைக்கும் தரமுயர்ந்த பிலிப்ஸ் உறுப்புகள்.
- உச்சச் சக்தி தரும் சப்தமற்ற மோட்டார்.

2. வெளிப்புறம் - கவர்ச்சி மிக்க நவீன தோற்றம்.


- உலோக அலகுகள். (4 அலகுகளுடனும் கிடைக்கும்.)
- வலம், இடமாக 90 பாகைக்கும் மேலாகச் சுழலும்.
- 3 வேகங்கள். 4 அழுத்து விசைகள் மூலம் இயங்கும்.


விலை: ரூ2000/- அமெரிக்க டொலர்: 33 இலிருந்து மேல்

இலங்கையில் பிலிப்ஸ் நிறுவனத்தின் ஏக பிரதிநிதிகள்:
ஹேலீஸ் லிமிட்டெட்.
25, வொக்ஸ்டர் ஒழுங்கை, கொழும்பு 10.
தொலைபேசி: 91181 - 9

காட்சிச்சாலை:
646, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 86958

மேலும் கிடைக்குமிடம்: தீர்வையற்ற கடைத் தொகுதி 2 தீர்வையற்ற வர்த்தக வளாகம், கொழும்பு 3.





PHILIPS பிலிப்ஸ் துணையுடன் அதி சிறந்ததை அளிப்போம்.


## 31ம் நாள் நினைவஞ்சலி

நயினை கணபதிப்பிள்ளை
கந்தையா



தோற்றம்: 06-11-1902
மறைவு: 08-30-1984

மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்கள், பிள்ளைகள்
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில். (1816)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செஞ்சிலுவைச் சங்க உதவி

(பண்டத்தரிப்பு)

கடந்த ஜூலை மாதக் கலவரங்களின் போது குடும்பத் தலைவரை இழந்த சங்கரத்தையைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினர் அண்மையில் உணவுப் பொருட்களையும், உடுபுடவைகளையும் நேரடியாகச் சென்று வழங்கியுள்ளனர்.

செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளைத் தலைவி திருமதி அனிதா நேசையா தலைமையில் சென்ற குழுவினர் மேற்படி பொருட்களை வடிவேலுவின் மனைவி திருமதி சிவபாக்கியம் வடிவேலுவிடம் கையளித்தனர்.

## ஆசிரியர் நிலைமை

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் விடயம் தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிலைமை விளக்குவதற்கு சங்கப் பொதுச் செயலாளர் திரு த.மகாசிவம் சங்க பணிமனையில்" இம்மாதம் 9ம் திகதி காலை பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை கூட்டுகின்றார். (க)

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 25ம் திகதி
7-4-1984
சனிக்கிழமை

மேடம்: அவசரப்புத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும்.

இடபம்: தங்கிவரும் வெளி விப்பணம் தொடர்புகளை பெருக வைக்கும். தள்ளி வைத்த மக்கள் உம்மை அள்ளி அணைத்திடுவர்

மிதுனம்: இருள் மண்டிக் கிடக்கும். இன்று ஏமாற்றம் தாக்கும். குடும்பத்தில் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

கடகம்: இதயத்தைத்தொடும் சம்பவங்கள் இடம்பெறும். சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

சிம்மம்: அரசியலில் ஆர்வம் பிறக்கும். பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும். இதன் மூலம் சிரமங்களும் தெளிவடையலாம். சிலருக்கு எதிர்பாராத வகையில் அதிஷ்டமும் கிடைக்கும்.

கன்னி: உறவாடிக் கெடுப்பதற்கு பகைவர்கள் வருவார். உற்சாகம் குன்றும். பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும். சிலருக்கு உஷ்ண ரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

துலாம்: குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும். காதல் விவகாரங்களில் நன்மை உண்டு. சிறப்பான தினம்.

விருச்சிகம்: செய்தொழில் வளர்ச்சி ஏற்படும். சதிசெய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர். பிரயாணத்தைத் தவிர்க்கவும். இறைநம்பிக்கை நன்று.

தனுசு: தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றாடலில் மதிப்பு உயரும். புண்ணியஸ்தலம் ஒன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம். தெய்வத்தின் துணை உண்டு.

மகரம்: தங்கக்குணம் மேவிடும். நன்மதிப்பும் கிடைக்

(9ம் பக்கம் பார்க்க)


PHILIPS

PHILIPS

# பிலிப்ஸ் கறுப்பு வெள்ளை தொலைக்காட்சி. உங்களால் சமாளிக்க முடிந்த விலையில் சிறந்ததை வாங்துங்கள்

24' US டாலர் 376
ரூபா 6975/-

17' US டாலர் 148
ரூபா 5800/-



14' US டாலர் 112
ரூபா 3850/-

12" US டாலர் 90
ரூபா 2975/-

ZENITH

உலகப் பிரசித்திபெற்ற பிலிப்ஸ் தூக்கிச்செல்லக்கூடிய
கறுப்பு வெள்ளை தொலைக்காட்சி 12" 14" 17" 24"
அளவுகளில் கிடைக்கும்

பிலிபஸ கறுப்பு வெள்ளை தொலைக்காட்சியின் விசேட அம்சங்கள்

- உடன் இயக்க படக்குழாய்
- முற்றிலும் மாற்றியமைக்ககூடிய டெலிஸ்கோபிக் (தூரதிருஷ்டி) ஏரியல்
- மெயின் அல்லது 12v கார் பற்றறி இயக்கம்
- UHF VHF சேவை

இலங்கையில ஏகப்பிரதிநிதி

HAYLEYS

ஹேலீஸ் லிமிடெட்

காட்சி அறைகள்: கொள்ளுப்பிட்டி தொலைபேசி 86958
மேலும் கிடைக்கும் இடம்: தீர்வையற்ற விற்பனைத் தொகுதி
தரை மாடி, கடை இல

பிலிப்ஸ் துணையுடன் அதி சிறந்ததை அளிப்போம்.

## அகில இலங்கை சமாதான நீதிவான்



வெளிவிவகார அமைச்சில் உள்ள வெளிவிவகார அலுவல்கள் இயக்குநர் நாயகத்தின் அந்தரங்க உதவியாளரான திரு எஸ்.எஸ்.சேகரம் அகில இலங்கை சமாதான நீதிவானாக கொழும்பு மாவட்ட நீதிபதி திரு விமால் விக்கிரமசூரிய முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டார்.

கடந்த 36 வருட காலமாக அரசாங்க சேவையில் இருந்து வரும் திரு சேகரம் இந்த மாத இறுதியுடன் சேவையிலிருந்து இளைப்பாறுகிறார். வெளிவிவகார அமைச்சில் பல பதவிகளை வகித்த இவர் இயக்குநர் நாயகமாக பதவி வகித்த அனைவரினதும் அந்தரங்க உதவியாளராக இருந்து வருகிறார்.

1975ஆம் ஆண்டு முதல் 1979ஆம் ஆண்டு மார்ச் மாதம்வரை இந்தோனேஷியாவில் இலங்கை தூதரகத்தில் தூதரகப் பொறுப்பதிகாரியாகவும் தூதுவர்களின் அந்தரங்கச் செயலாளராகவும் பணிபுரிந்து வந்தார். இவர் கொழும்பு மேற்கு பகுதி சமூக சேவையாளர். நீண்டகாலம் இந்தப் பகுதியிலேயே வசித்து வருகிறார். இவர் கொழும்புத் துறை [illegible] புதல்வராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உலக சாதனை செய்தபோது காதலித்தேன்

# குடும்பப் பிரச்னை ஏற்படும்போது கண்ணாடி ஆணிகளை விழுங்குவார்!"

## மரணவிசாரணையில் இளம் மனைவி சாட்சியம்"

(யாழ்ப்பாணம்)

"எனது கணவர் 21 நாட்கள் தொடர்ந்து டுவிஸ்ட் நடனமாடி உலக சாதனை ஏற்படுத்த, உரும்பராய் அம்மன் கோவிலுக்கு வந்தார். அப்பொழுதுதான் அவரைச் சந்தித்து காதலித்துத் திருமணம் செய்தேன். என் கணவர் குடும்பப் பிரச்னை ஏற்படும்போதெல்லாம் கண்ணாடித்துண்டுகளையும், ஆணிகளையும் விழுங்குவார்.

உரும்பராயில் மர்மமான முறையில் மரணமான செல்லத்துரை நாகேஸ்வரனின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த அவரது 20 வயதான மனைவி நா. விஜயகுமாரி மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதிமன்றத்தின் நீதிவான் எஸ். நாகராசா முன்னிலையில் நேற்றுக் காலை மரணவிசாரணை நடைபெற்றது.

### சீதனத்தால் பிரச்னை

கடந்த மாதம் 28-ம் திகதி மரணமான நாகேஸ்வரனின் மரணவிசாரணையில், அவரது மனைவி விஜயகுமாரி சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:-

இறந்தவர் எனது கணவர். இரண்டு வருடத்திற்கு முன் திருமணம் செய்தேன். ஆண் பிள்ளை உண்டு. எங்கள் திருமணம், காதல் திருமணம். அவரின் தகப்பனுக்கு இத் திருமணத்தில் விருப்பம் இல்லை. திருமணத்தின் பின் சந்தோஷமாக இருந்தோம். 2 மாதத்தின்பின் சிறுசிறு பிரச்னைகள் ஏற்பட்டன. என் பெற்றோர் சொன்ன மாதிரி சீதனம் கொடுக்கவில்லை. இன்று வரைக்கும் சீதனம் தரவில்லை. அதன் காரணமாகவும் பிரச்னை எழுந்துள்ளது.

என் பிள்ளைக்கு வயது 10 மாதம். என் கணவர் என் பெற்றோர் சகோதரர்களுடன் ஒற்றுமையாகப் பழகுவார். எங்களுக்கிடையில் கோபதாபமில்லை. என் கணவர் பெற்றோர் வீட்டிற்குக் குழந்தை பிறப்பதற்கு முன் போகவில்லை. குழந்தை பிறந்தபின்தான் போய்வருவோம். இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன் போனோம். அவர்களும் உரும்பராயில் தான் வசிக்கிறார்கள்.

எனது கணவன் பெற்றோருக்கு அறிவித்ததும் அவர்கள் மரணச்சடங்கிற்கு வரவில்லை.

என் கணவர் கண்ணாடித்துண்டுகளையும் ஆணிகளையும் குடும்பத் தகராறு ஏற்படும்போது எல்லாம் விழுங்குவார். இது பற்றி என் பெற்றோருக்குச் சொல்லவில்லை.

கடந்த மாதம் 22-ம் தேதி காலை வேலைக்குப் புறப்பட்டார். அவர் எங்காவது கூலி வேலைகளும் செய்வார். காலை 6 மணிக்கு போய் பிற்பகல் 2 மணிக்கு வந்தார். காசு 15 ரூபா தந்தார். செலவுக்கு இது போதாது இன்னும் காசு தேவை என்றேன். அவர் போய்விட்டார். பின் 6 மணிக்கு திரும்பி வந்தார். 'சாப்பிடுங்கோ' என்று சாப்பாட்டைக் கொடுத்தேன். அவர் சாப்பிடவில்லை. 'நான் தந்த காசு பத்தாதா என்றியா' என்று சொல்லி எனக்கு அடித்தார். பின் தனது உடுப்புகளையும் எடுத்துக் கொண்டு வெளியில் சென்றார். அவர் ஒன்றும் சொல்லவில்லை. தாய் வீட்டை போய் விட்டார் என நினைத்துப் படுத்துவிட்டேன். அன்றிரவு 6 மணிக்குப் படுக்கப் போனேன். அவர் வரவில்லை.

### அன்று திரும்பவில்லை

இதற்கு முன்பும் இப்படி கோபித்துக் கொண்டு போய் விட்டு திரும்பி விடுவார். ஆனால் அன்று அவர் வரவில்லை.

மறுநாள் காலை 5 மணிக்கு வெளியில் போனபோது அவர் கல்கிறீற் கற்களுக்கிடையில் இறந்து கிடந்தார். தலைக்குக் கீழேயும் கல் இருந்தது. சாரம் ஒன்று கழுத்தை சுற்றியிருந்தது. சாரத்தின் இரு பக்கமும் கற்கள் கட்டப்பட்டிருந்தன. காதிலிருந்து இரத்தம் வடிந்திருந்தது. ஐயோ என்றுதான் குளறினேன். அயலவர்கள் கூடிவிட்டனர். அதன் பின் நான் அழுது கொண்டிருந்தேன்.

### காதலித்த 15வது நாள் ..

நான் அவரைக் காதலித்து 15 நாட்களுக்குப்பின் பதிவுத் திருமணம் செய்தோம். என் கணவர் தற்கொலை புரிந்திருக்கிறார் என்றுதான் கருதுகிறேன். என் கணவர் மரணம் குறித்து எவரிலும் சந்தேகமில்லை. என் கணவருக்கு கோபக்காரர் கிடையாது.

என் கணவர் மனநோயாளியாக இருக்கவில்லை. அவர் திடகாத்திரமான தேகமில்லாதவர். அவர் ஒரு நோயாளியாக வது கொலைசெய்திருப்பார்கள் என்று கருதவில்லை. தற்கொலை செய்திருப்பார் என்றே கருதுகிறேன்.

மேல்விசாரணை இம்மாதம் 25ம் தேதி வரை ஒத்திப் போடப்பட்டது. (க)


COMPUTER PROGRAMMING
BASIC — COBOL

40 மணித்தியாலம் செய்முறைப்பயிற்சியளிக்கப்படும்.
★ ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங்
★ எலக்ரிக் வயறிங் ★ வெல்டிங்
இரண்டு மாத செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்.
★ HOTEL MANAGEMENT
★ பட வரைநர் பயிற்சி
DRAFTSMAN COURSE - ENGLISH, FRENCH
GERMAN பேச, எழுத கற்பிக்கப்படும்
ஆரம்பம்: 09-04-84

JAFFNA TECHNICAL INSTITUTE
52/1, கனகரத்தினம் கட்டிடம்
(றெயில்வே கடவை அருகாமை)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## புதிய ப. நோ. கூ. சங்க கிளை திறப்பு

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிய கிளையொன்றினை வெற்றிலைக்கேணியில் திறக்கவுள்ளது.

இக்கிளை திறக்கப்படுவதனால் இப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாகப் பொருட்களைப் பெறுவதில் எதிர்நோக்கிய கஷ்டம் நீங்குகிறது. (சு)

## சீர்கேடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த விடத்தல்தீவு தொடக்கம் வெள்ளாங்குளம் வரையிலான 20 கிராமங்களுக்கான தபால்விநியோகம் கடந்த ஒரு மாதகாலமாக சீர்கேடடைந்துள்ளதால் இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரும்பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

(யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்க உதவிப் பொதுமுகாமையாளராகவிருந்து துப்பாக்கிச்சூட்டில் மரணமான திரு. நாகநாதன் குமாரசாமியின் நினைவாக யாப்பெற்றது)


## மறக்கலாமோ!

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க மேலோங்க
இயலுதவிப் பொதுமுகாமை ஏற்றுநின்றார்
நாளொன்றில் வங்கியுள கொள்ளை போனதை
தன்னெதிர்த்துப் புறங்காட்டி ஓடலின்றி
நாளுமுழைப்பவர் நல்ல சமிக்ஞை
கன்றேனும் தன்னுயிரை நயந்து வள்ளல்
தாழ்விலா முயற்சி செயும் கரும யோகி
தருமவரைப் போற்றி குமரனையும் மறக்கலாமோ

ஊரிலொரு பெரிய ரென உலவோ ரெல்லாமே
"ஓட்டோன்" என்றன்புமொழி உரைத்து
தழைத்தான்
பாரில் யாழ் வர்த்தக கூட்டுறவுப் பீடம்
பரிமளிக்கும் உதவிப் பதியுமானார்
நேரிலன்று கொள்ளையரை எதிர்த்தபோதும்
நிலையத்தைப் பேணத் தன்னுயிரை ஈந்தான்
பேரொருவர் குமாரனைப்போல் இனிமேலாவார்
அருமை குமாரனை மறக்கலாமோ?


- இசைப்புலவர் சி. செல்லத்துரை


மங்கள புத்தாண்டு—தெவிட்டாத புதுச்சுவை...




கேசரி (ரவை & பால் இனிப்பு)

1 ரின் மில்க்மெயிட்
1/4 இரு பட்டர் அல்லது மாஜரின்
1/2 இரு மா
1/2 தேக்கரண்டி அப்பச் சோடா
1 தேக்கரண்டி பேக்கிங் பவுடர்
1/2 கோப்பை நீர், 1 தேக் கரண்டி கொக்கோ
2 தேத் கரண்டி வனிலா. சிறிதளவு உப்பு



மணமும் சுவையும் அள்ளித்தருவது


செய்முறை

மா.கொக்கோ முதலியவற்றை 3 தடவைகள் அரிக்கவும். பட்டர், மில்க்மெயிட் நீர் ஆகியவற்றைச் சூடாக்கவும். நன்கு அடிக்கவும். அடித்துக்கொண்டே அரித்தெடுக்கப்பட்ட பொருட்களைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்கவும். வனிலா சேர்க்கவும். பட்டர் பூசித் தயார்செய்யப்பட்ட ரின்னில் போட்டு சுமார் 30-50 நிமிடங்கள் வேகவைக்கவும்

12-15 பேருக்கு

மில்க்மெயிட் கேக்

250 கிராம் ரவை 100 கிராம் சீனி
10 அவுன்ஸ் பால் (1/2 ரின் மில்க்மெயிட் பாலும் நீரும்)
1/2 தேக்கரண்டி ரோஸ் வாட்டர்
75 கிராம் நெய். 100 கிராம் முந்திரி வற்றல்
100 கிராம் முந்திரிகைப் பருப்பு
3 ஏலம்



முட்டை இன்றி தயாரிக்கப்படுவது


செய்முறை

முந்திரிகைப் பருப்பை பெரிய துண்டுகளாக வெட்டவும். ஏலக் காய்களை இடிக்கவும் நெய்யைச் சூடாக்கி முந்திரிகைப் பருப்பைப் பொரிக்கவும் அவற்றை எடுத்த பின் முந்திரி வற்றலையும் அதே எண்ணெய்யில் பொரித்தெடுக்கவும். இதே தாச்சியில் ரவையைப் போட்டு நன்கு வறுத்தெடுக்கவும். இன்னுமொரு பாத்திரத்தில் பாலைச் சூடாக்கி சீனியையும் சேர்க்கவும். நன்கு கரைந்ததும் அதனுள் ரவையைப் போடவும். பால் நன்கு உறிஞ்சப்படும் வரை அவியவிட்டு இறக்கவும். முந்திரிகைப் பருப்பு, ஏலம், முந்திரி வற்றல் ஆகியவற்றையும் ரோஸ் வாட்டரையும் சேர்த்துப் பிரட்டவும்.

(12 பெரிய துண்டுகள் வெட்டலாம்)

பாயாசம்

1/2 ரின் மில்க்மெயிட்
1 மேசைக் கரண்-சீனி
3 மேசைக் கரண்டி ரவை
20 முந்திரிகைப் பருப்பு
1 மேசைக் கரண்டி முந்திரி வற்றல்
4 ஏலக்காய். சில துளிகள் ரோஸ் எசென்ஸ்
2 தேக்கரண்டி நெய்
3 ரின் நீர்



பருகப் பருக இன்சுவை

செய்முறை

முந்திரிகைப் பருப்பையும் வற்றலையும் தனித்தனியே நெய்யில் பொரித்து எண்ணெய் வடியவிடவும்.

ரவையை நெய்யில் போட்டு இளஞ்சூட்டில் வறுத்தெடுக்கவும். ரவைக்குள் வெந்நீரை ஊற்றி இளஞ்சூட்டில் 5 நிமிடங்கள் அவியவிடவும் பின்பு, சூடான பால், சீனி முதலியவற்றையும் சேர்த்து நன்கு பிரட்டவும் ஏனைய பொருட்களையும் சேர்த்துக் கிளறிவிடவும். சூடாகவோ அல்லது ஆறிய பின்போ பரிமாறலாம்.

விலை ரூ. 15.70

மில்க்மெயிட் புத்தாண்டுப் பலகாரங்களுக்கு அது தரும் இன்சுவை

Grant K & E 5384


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சிதறல்

## நமது நிருபர்கள்

### சாதிப்பிரிவினை சீதனக் கொடுமை

(சாவகச்சேரி)

''இன்றைய தமிழ் சமுதாயத்தின் மத்தியில் புரையோடிக் கிடக்கும் சமூக அழுக்குகளாக சாதிப்பிரிவினை சீதனக் கொடுமை ஆகிய இவைகள் அமைந்துள்ளன நமது சமுதாயத்தின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் இவ்வழுக்குகள் முற்றும் முழுதாக தூக்கி வீசப்பட வேண்டும்'' என்று சர்வதேச சமாதான படையின் வடபிரதேச அமைப்பாளர் கைதடி அரசினர் முதியோர் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் அறவழிப்போராட்டக் குழுத்தலைவர் திரு வி. எஸ். துரைராஜா தனது தலைமையுரையில் கூறினார்.

### சிறுவர் பாடசாலை

(புலோலி)

உலக தரிசன நிறுவனத்தின் உதவியுடன் பொலிகண்டி கரையோர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் சிறுவர் பாடசாலை ஒன்றை அமைக்கவுள்ளது. இச்சிறுவர் பாடசாலையை அமைப்பதற்கான நிதியை உலக தரிசன நிறுவனம் பொலிகண்டி கரையோர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் கையளித்துள்ளது.

### ஆலோசனைக் கூட்டம்

(வேலணை)

ஊர்காவற்றுறைத் தொகுதி பொது விளையாட்டு மைதான புனருத்தாரண வேலைகள் பற்றிய ஆலோசனைக் கூட்டமொன்று ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள விளையாட்டுப் போதனாசிரியர்களும் மற்றும் விளையாட்டு குழும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

### சாரணர் சிலை திருத்தப்படும்

(வேலணை)

யாழ். செயலகத்திற்கு முன்பாக உடைக்கப்பட்ட நிலையில் காட்சி தருகின்ற சாரணர் சிலையை திருத்தி அமைத்துத் தருவதற்கு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு கே. சிவஞானம் சம்மதம் தெரிவித்துள்ளாரென யாழ் மாவட்டச் சாரணர் தொண்டர் உதவி ஆணையாளர் திரு செ. வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

### விரைவில் வேலைவழங்க வேண்டும்

(வண்ணார்பண்ணை)

''1980ம் ஆண்டு பொது வேலை நிறுத்தத்தின் போது பாதிப்புக்குள்ளாகி இதுவரை வேலை வழங்கப்படாதிருக்கும் சகல ஊழியர்களுக்கும் விரைவில் வேலை வழங்க வேண்டும்'' என்று சகல அமைப்புக்களையும் கோருவதென அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை யாழ் மத்தியகல்லூரி முன்பாக நடந்த இச்சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### விளையாட்டுப் போட்டி

(வேலணை)

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் தீவுப்பகுதி தெற்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான

மெய்வல்லுனர்ப்போட்டி வரும் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது.

### பதநீர்

[வண்ணார்பண்ணை]

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதநீர் (கருப்பணி) இறக்குவதற்கும் பதநீரை விற்பனை செய்வதற்குமான நடவடிக்கைகளைப் பனை அபிவிருத்தி சபை இவ்வாறு முதல் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது அதிகமாகப் பனைகள் இறக்கும் இக்கால போகத்தில் பதநீரை அதிகமாக இறக்கிப் பதநீர் விற்பனைக்கு உதவுமாறு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பனை அபிவிருத்தி சபை ஆலோசனை வழங்கியுள்ளது. பனைகள் சேதப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கும் சகல மக்களும் பாவித்துப் பயன்படத்தக்க பதநீரை பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கும் வசதியாகப் பதநீர் உற்பத்தியை மேற்கொள்ளுமாறும் இச்சபை குறித்த சங்கங்களுக்கு ஆலோசனை வழங்கிவருகிறது.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 5-30 | சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-00 | சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்) |
| 6-30 | சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | விக்டோரியா திட்ட விவரணச்சித்திரம் |
| 7-45 | "டிபரன்ட்ஸ் ரோக்ஸ்" நகைச்சுவை நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | நாடகம் (சிங்களம்) |
| 9-05 | இசை நிகழ்ச்சி (சிங்களம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 10-00 | "ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்" துப்பறியும் தொடர் (ஆங்கிலம்) |
| 10-30 | உலகச்செய்தி தலைப்புகள் |
| 10-35 | டெலிவிஷன் தொடர்ச்சி |
| 11-30 | நிகழ்ச்சிகள் முடிவு |

நெடுந்தீவு நூலகத்துக்கு

## தனிநாயகம் அடிகளார் பெயர்சூட்டக் கோரிக்கை

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் பொது நூலகத்திற்கு தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் பெயரைச் சூட்டுமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவையும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கத்தையும் நெடுந்தீவு தனிநாயகம் அடிகளார் நினைவாஞ்சலிக்குழு கேட்டுள்ளது.

தமிழ் மொழியின் தனித்துவத்தையும் தொன்மையையும் உலகெங்கும் எடுத்துக்காட்டும் வகையில் உலகத்தமிழாராய்ச்சி மன்றம் நிறுவக் காரணகர்த்தராக விளங்கிய வண. தனிநாயகம் அடிகளார் நெடுந்தீவைச் சேர்ந்தவர் என்பதால் நெடுந்தீவில் நிறுவப்படும் நூலகத்திற்கு அவரது பெயரைச் சூட்டுவது மிகவும் பொருத்தமானது என ஞாபகார்த்தக்குழுவின் செயலாளர் திரு. என். இலட்சுமணராசா யாழ் அரசாங்க அதிபரிடம் தெரிவித்துள்ளார். (சு)

## "ஆனந்தசங்கரியின் கனவு விரைவில் நனவாகும்"

(பச்சிலைப்பள்ளி)

"கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வைத்தியர்களும், பொறியியலாளர்களும் வரைவில் உருவாகுவார்கள். அப்போது முன்னாள் கிளிநொச்சி எம். பி. ஆனந்தசங்கரியின் கனவு நிறைவேறும்".

இவ்வாறு பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஏ. தங்கராசா, பளை மகாவித்தியாலயத்தில் அண்மையில் ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் பேசும்போது கூறினார்.

இவ்வைபவம் வித்தியாலய அதிபர் திரு. க. பொ. செல்லையா தலைமையில் நடைபெற்றது.

வட்டாரக் கல்வியதிகாரி

(9-ம் பக்கம் பார்க்க)


தரமான உணவுப் பொருட்களைத்
தயாரிக்கும் ஒல்லாந்தின் படைப்பு




- ஐரொப்பா முழுவதும் சிறுவர்கள் அதிகமாக விரும்பும் கோல்டன் கேட் வழமை போல் அதன் எளிமையான உறையிலேயே வருகிறது.
- செழுமையானது போஷாக்கு நிறைந்தது பாண் பிஸ்கட் பணிஸ் போன்றவற்றுடன் அதன் சுவையோ மதுரமானது.
- கோல்டன் கேட் கொண்டு அம்மா சமைத்த உணவின் சுவை. ...... அபாரம்.
- கைக்கு அடங்கிய விலையில் கூடுதல் அளவில் 250 கிறும் மாகரீன். உறை நீங்கலாக ரூபா 11.75 மட்டுமே.
- வளரும் உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமும் அதிக சக்தியும் பெறுவதற்குப் பாவியுங்கள் கோல்டன் கேட்........

# கோல்டன் கேட்
## மாகரீன்

குழந்தைகள் உங்கள்மீது கொள்ளை ஆசை கொள்வர்

TEAM

சந்தைப்படுத்துவோர்
அமினுஸ் இன்டர்நாஷனல் லிமிட்டட்
482 டாக்டர். டி. பீ. ஜயா மாவத்தை, (டாலி றோட்) கொழும்பு-10,
தொலைபேசி 596385 – 91699


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி — பாரதி
**தங்கச் சுரங்கம்**
(புதியபிரதி)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30
ஜெமினிகணேசன்-கே.ஆர்.விஜயா
**சகலகலாவல்லவன்**

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா,
சோ நடித்த
**என் அண்ணன்**
(புதிய பிரதி கலர்)

2 தினங்கள் மட்டும்
**ராணி** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-ராதா
**டிக் டிக் டிக்**
(கலர்)
9-4-84 முதல்
**சக்கரவர்த்தி திருமகள்**

கடைசி 5 தினங்கள்
**ராஜா** (யாழ். நகர்)
[illegible] — ஸ்ரீதேவி — தீபா
**மீண்டும் கோகிலா**
(கலர்)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30 மணிக்கு
ஜெய்-ஜெயசித்ரா
தேங்காய்-மனோரமா
**உங்கள் விருப்பம்**
சிறந்த நகைச்சுவை
சித்திரம்
...புதிய பிரதி...

கடைசி இரண்டு தினங்கள்
**ஹரன்** (யாழ் நகர்)
Warner Brothers
Proudly Presents
CLINT EASTWOOD in
OUTLAW
JOSSY WALES
திங்கள் முதல்
GOD FATHER II

**றீகல்** (யாழ். நகர்)
Daily 10-30, 2-30, 4-45
7-00 p. m. only
**Hijacking of Savoy**
[Action-Thrilling-Color]
[illegible] "விமானக்கடத்தல்" கண்டு களியுங்கள்

**லிடோ** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
Roger More Sylvia Syms
THE FICTION MAKERS
James Bond-Eastman color
The saint's most dangerous mission yet

**வின்ஸர்** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவீந்தர் - ரூபா
**ஒரு தலை ராகம்**

**வெலிங்டன்**
தினசரி 10-30, 2-15
4-30, 7-00 and 9-00
Antony Quinn in
**The 39 Steps**
(Spy film-more suitable adults)



# NOTICE
**AITKEN SPENCE — THE INSURANCE PEOPLE**
We have Moved over to the Adjacent
Building No. 192/1, Hospital Road, Jaffna.
Tel: No. 22731

**ஐகின் ஸ்பென்ஸ் காப்புறுதியாளர்கள்**
எங்கள் அலுவலகம் அருகிலுள்ள கட்டிடம்
இல. 192/1க்கு மாற்றப்பட்டுள்ளது.
தொலைபேசி இல. 22731
1787



**டீபக் PL-4 லேத் மெசின்**
**3&4 ஜோ சக்குடன்**
விற்பனைக்குண்டு.
பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
1694


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ். இல. சடு 4522
1. கணபதிப்பிள்ளை பழனித்துரையும் பெண் [illegible]
பத்தைமேனி, அச்சுவேலி.
வழக்காளி

எதிராக

முத்தன் தம்பிஐயா பத்தைமேனி, அச்சுவேலி.
எதிராளி

மல்லாகம் மாவட்ட கோட்டின் சடு / 4522 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி, 1984ம் ஆண்டு ஏப்ரல் மீ 25ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும். (25-4-84)

**தீர்வைத் தொகை:**


முதல் வட்டி ரூபா 3400/- மேலும் ரூபா 2800/க்கு 29-12-81 தொடக்கம் 14-7-82 வரைக்கும் 20% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகையும் இறுபடும்வரைக்கும் 12% வட்டியும் கோட்டுச்செலவு 3700/70.

**ஆதன விபரம்**

யாழ்ப்பாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோவிற்பற்று பத்தைமேனி [illegible] பெரியசீமாவும் [illegible] சீமாவும் [illegible] நில. பர 4 [illegible]. [illegible] கிழக்கு செம்பன் சுந்தரத்துக்கும் பெண் சரஸ்வதிக்கும் உரிய ஆதனம். [illegible] மாலிலாமணி மாணாவுக்கும் பெருமாள் கந்தசாமிக்கு முரிய ஆதனங்கள் மேற்கு ஒழுங்கையும் [illegible] தருமனுக்கும் பங்காளருக்குமுரியவாதனம். தெற்கு வேலுப்பிள்ளை கதிரவேலுவுக்குரிய ஆதனமும் பொது நிலமும் இதடங்கலும் குறித்த கிணற்றில் கிழக்கேயிருக்கும் துண்டுக்குரிய தண்ணீர்ப் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீக்கலாக மிகுதி உரவும்.

"விதானை வளவு" — சி. செ. மாரிமுத்து
சித்தன்கேணி — நீதிமன்றங்களின் விற்பனவு
7-3-84. — ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.
1806


★ மதுரா கைலாசபிள்ளை ★




நி
னை
வ
ஞ்
ச
லி

மழலை பேசவென்றே மகளே வந்துதித்தாய்!
தசாப்தம் வாழ்ந்த பின்னர் எமைத்தவிக்கவிட்டுச் சென்றாயே!
மூன்றாண்டு போயுமென்ன கண்ணுள்ளே நிற்கின்றாய்
உன் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்கும்
'மாணிக்கம்' பெற்றோர் சகோதரர்கள்
கொக்குவில். (1790) அப்பம்மா


## ஆனந்தசங்கரி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து உரையாற்றும் போது குறிப்பதாவது!

"பளை மகாவித்தியாலயம் பல துறைகளில் முன்னேற்ற மடைந்து வருவதை நேரில் கண்டுவருகிறேன். மாணவர்களின் ஒழுக்கம், ஆசிரியர்களின் விடாமுயற்சி, பெற்றோர்களின் ஒத்துழைப்பு என்பவையே இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு காரணமாகவுள்ளது. எதிர்காலங்களில் விஞ்ஞானத்துறையும் இங்கு வளர்ச்சியடைய வேண்டும்" என்றார்.

## தமிழர் விடுதலைக்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

போதிலும் அதற்குப் பலவீனமான முட்டுக் கட்டைகள் போடப்பட்டுள்ளதாக நாம் அறிகிறோம்.

திருமலை வல்லரசுகளின் போட்டிக்கு மையமான ஒரு பிராந்தியமாக மாற்றப்படுவதை நாம் முழுதாய் எதிர்க்கிறோம்.

"இப்படிக் கொடுக்கப்படப் போகிறது என்பதை அறிந்து தான் திருமலை முன்னாள் எம். பி. திரு. ஆர். சம்பந்தன், இப்படிக் கொடுக்கப்படக்கூடாது என ஜனாதிபதிக்கு சில நாட்களுக்கு முன் கடிதம் எழுதியிருந்தார்."

## இன்றைய பலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கும். இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும். உழைப்பினால் பணமும் உற்சாகமும் பிறக்கும் முன்னேற்றமான தினம்.

கும்பம்; மதிப்பு உயரும். பொதுமக்கள் ஆதரவு கிடைக்கும். புத்திரரால் புகழும் உண்டு புதினமும் கேட்பீர்.

மீனம்: துன்பத்தின் ரேகைகள் நிலைகெட்டு ஓடும். துணைவியின் உடல்நலம் கெடும். பணமும் பொருளும் செலவாகும்.

சோதிடமாமணி
திருமதி
வே. ரவீந்திரன்


# சுவை மிகும் மூன்று
# யானை மார்க்
# தளிர் பானங்கள்

ஒரேஞ்
லைம்
லெமன் கிரஷ்




வெய்யில் வேகமா?
தண்ணீர்த் தாகமா?
குளிர்ச்சியும்
மலர்ச்சியும் தரும்
சுத்தமான பழச்சுவை
மிகும் யானை மார்க்
குளிர் பானங்கள்
பருகுவீர்
எங்கும் எந்த
வேளையும், உருசி
மிகும் சிலிர் சுவை
யூட்டும் ஒரேஞ், லைம்,
லெமன் கிரஷ்,
பருகச்சிறந்த
யானை மார்க் குளிர்
பானங்கள்!

ஒரேஞ், லைம், லெமன் கிரஷ் - எந்த வேளைக்கும் ஏற்றவை.

RJA - 1328

CCS சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

